# திருச்சித்திரகூடம்

திருச்சித்திரகூடம் என்பது, தென்னாட்டுப் பிரபல க்ஷேத்திரமான சிதம்பராலயத்துள்ள திருமால் கோயிலாகும். இக்கோயில் மேட்டிடமாக அமைந்ததாகலின் 'சித்திரகூடம்' எனப்பட்டது. 'சித்திரகூடம் தெற்றியம்பலம்' என்பது திவாகரம். தெற்றியம்பலம்-திண்ணையிடமான அம்பலம். இதனை அடுத்திருக்கும சிற்றம்பலம் கீழிடமாக உள்ளமையின், அதனின் வேறுபாடறிய இவ்வாறு வழங்கியதுபோலும். திருவெறும்பூர் மகாசபையார், திருச்சித்திரகூடத்தில் வீற்றிருந்து நிபந்தங்கள் சில செய்தனர்* என்று அவ்வூர்ச் சாஸனமொன்று கூறுகின்றது. இதனால் நகரமகாசபைகள் கூடுதற்குத் தெற்றியம்பலமான சித்திரகூடங்கள் முற்காலத்து உபயோகப்பட்டுவந்தமை தெரியலாம். திருத்தெற்றியம்பலம் என்ற பாடல்பெற்ற பழைய திருமால்திருப்பதியும் இத்தகையதொன்றாகவே கருதத்தகும்.† இதுபோலும் அம்பலங்கள்பல ஆதியில் தேவாலயங்களாக அமைந்திருந்தன.

இத்தில்லைத் திருச்சித்திரகூடம், திருமங்கையாழ்வாராலும் குலசேகரப் பெருமாளாலும் பாடல்பெற்ற சிறப்புடையது. இவருள் திருமங்கை மன்னன்—

> "பைம்பொன்னு முத்தும் மணியுங் கொணர்ந்து
> படைமன் னவன்பல் லவர்கோன் பணிந்த
> ...தில்லைத் திருச்சித்திரகூடம்" (பெ. தி. 3, 2, 3)

என்று பாடுகின்றார். இதனால், பல்லவ வேந்தனொருவனால் ஆதியில் அபிமானிக்கப்பட்டது இத் திருமால்கோயில் என்பது தெரியலாம்.

> "பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்"
> "நந்தி பணிசெய்த நகர் நந்திபுர விண்ணகரம்" (பெ. தி. 5, 10, 7)
> "கோச்சோழன் சேர்ந்தகோயில் திருநறையூர் மணிமாடம்" (6, 6, 5, 9)

எனப் பண்டையரசர்கள் திருப்பணிசெய்து‡ வணங்கிய தலங்களை இவ்வாறே ஆழ்வார்கள் பாடியிருத்தல் காணலாம். இவற்றைப்போலப்

---

* MER. 127 of 1914.

† செங்கற்பட்டு ஜில்லா, சோமங்கலம் என்ற ஊரிலுள்ள திருமால்கோயிலும் சித்திரகூடம் என வழங்கப்பெற்றது (I. M. P. Cg. 849).

‡ 'பணிந்த கோயில்' முதலியன, பணிசெய்து பிரதிஷ்டித்த கோயில் என்ற பொருளில் முன்பு வழங்கியவை என்பது, மேற்காட்டிய ஆழ்வார்கள் வாக்குக்களினின்று அறியப்படும்.

http://acharya.org

பல்லவர்கோனால் பணிசெய்து வழிபடப்பட்டது இத்திருச்சித்திரகூடம் என்று கருதல் பொருந்தும். இங்ஙனம் பணிந்த பல்லவனாகத் திரு மங்கையாரால் புகழப்பட்டவன், அவர்காலத்தே பரமவைஷ்ணவனாக விளங்கிய இரண்டாம் நந்திவர்மனைச் சொல்லலாம்.

இச்சித்திரகூடத் திருமாலை முற்காலத்தில் முறைப்படி ஆராதித்து வந்தவர்கள் தில்லை மூவாயிரவரே யாவர்.

"மூவாயிரநான் மறையாளர் நாளும் முறையால் வணங்க
...தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்திரகூடம்" (பெ.தி. 3, 2, 8)
"தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் அந்தணர்களொரு
மூவாயிரவரேத்த வணிமணியா சனத்திருந்த வம்மான்" (குல. தி. 10, 2)

என்ற ஆழ்வார்கள் வாக்குக்களால் இது தெரியவருகின்றது. இவற்றால், சிற்றம்பலமான சிவாலயவழிபாட்டையும், தெற்றியம்பலமான சித்திர கூட வழிபாட்டையும் முறைப்படி புரிந்துவந்தவர்கள் தில்லை மூவாயி ரவர் * என்பது விளக்கமாம்.

"வரங்கிடந்தான் தில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (திருக்கோவை. 86)

என்ற திருவாதவூரடிகள் வாக்கினின்று, அவர்காலத்தும் இச்சித்திர கூடத் திருமால் கிடந்ததிருக்கோலத்தோடும் சிற்றம்பலத்தின் பக் கத்தே கோயில்கொண்டிருந்த செய்தி தெரியலாகும்.

இவ்வாறு, பழங்காலமுதலே தில்லையில் சிவாலயத்தை அடுத்திருந்த இத்திருச்சித்திரகூடம், சைவாபிமானமிக்க சோழனொருவனால் அழிக்கப் பட்டும், அங்கிருந்த திருமால்மூர்த்தம் கடலில் எறியப்பட்டும் போயின என்றும், இது, ஸ்ரீராமாநுஜாசாரியர் தமக்குக் கொடுமையிழைத்த சோழன் இறந்ததும் மேல்நாடான மைசூர்ச் சீமையினின்று திரும்பி

---

* இத் தில்லைமூவாயிரவர்போல, குடமலை நாட்டுத் திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு என்ற திருமால்திருப்பதியை—'அமர்ந்தசீர் மூவாயிரவர் வேதியர் கள் தம்பதி யவனிதேவர் வாழ்வு' 'மனக்கொள்சீர் மூவாயிரவர் வண்சிவனுமயனு மொப்பார் வாழ்விடம்' என்று மூவாயிரவரந்தணராற் சிறப்பித்துப் பாடுவர் நம்மாழ்வார். சிதம்பரத்துக்குச் சேய்த்தாகாத பழுவூர் என்ற தலத்தை—"அந்தணர் களான மலையாளரவரேத்தும் பழுவூரனே" 'மலையாளர் தொழுதேத்திப் பண்ணி னொலிகொண்டு பயில்கின்ற பழுவூரே' என்று சம்பந்தமூர்த்திகள் பாடுதலின் மலைநாட்டந்தணரின் வழிபாடு தென்னாட்டுத்தலங்களிலும் முற்காலத்து நிகழ்ந்து வந்தமை தெரியலாம். தில்லை மூவாயிரவர், சோணாட்டு அரசரொடு முரணிய காலத்தில் மலைநாடு சென்று தங்கியசெய்தி, கூற்றுவநாயனார் புராணத்துச் சேக்கிழார் கூறிய வரலாற்றினின்று அறியப்படுகின்றது. இவற்றை யெல்லாம் கூட்டி நோக்குமிடத்து, ஆழ்வார்பாடிய மலைநாட்டு மூவாயிரவர்க்கும் தில்லை மூவாயிரவர்க்கும் ஆதியில் தொடர்புண்டுபோலும் என்று கருத இடந்தருகின்றது.

http://acharya.org

ஸ்ரீரங்கத்துக்கு வந்த சிலவாண்டுகட்குப் பின்பு நிகழ்ந்ததென்றும் வைஷ்ணவ சரிதநூல்கள் பலவும் கூறுகின்றன. இவற்றுள், 'இராமாநுஜார்ய திவ்ய சரிதை' என்ற கிரந்தம்,* மேற்கூறியபடி திருமால் மூர்த்தத்தைக் கடலில் இட்டவன் 'சென்னி குலோத்துங்கன்' என்பான் என்று பெயர் குறிப்பிடுகின்றது. இச்சென்னி, இரண்டாங் குலோத்துங்கன் (கி. பி. 1135-1146) எனப்பட்ட சோழனே யாவன். இச்சோழனது ஆஸ்தானகவியாக விளங்கிய கூத்தர், இவன் மகன் இராஜராஜன்மேற் பாடிய உலாவில்—(அம்பலத்தைப்)

"பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்தும்
முன்னைக் கடலகழின் மூழ்குவித்த—சென்னி திருமகன்"

என்றும், அக்கூத்தரே பாடிய தக்கயாகப்பரணியிறுதியில்—

"முன்றிற் கிடந்த கருங்கடல்போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத் தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல் பெற்ற
மரகத மேருவை வாழ்த்தினவே"

எனவும் நயம்படப் பாடுதலால், இக் குலோத்துங்கனே 12-ம் நூற்றூண்டின் முற்பகுதியில் தில்லைச்சிவாலயத்துக்கு இடம்பெருக்க வேண்டித் திருச்சித்திரகூடத்தைக் குலைத்தவன் என்பது தெளிய அறியப்படும். சேக்கிழாராற் பெரியபுராணத்திற் சிறப்பிக்கப்பட்டவன் இச் சோழ வேந்தனே. திருநீற்றுச்சோழன்,† அனபாயன் என்றும் நூல்களினும் சாஸனங்களினும் இவன் வழங்கப்படுவன். இவன் சித்திரகூடத்தை அழித்த காலத்தைக் குறிப்பிடும் வெண்பாவொன்று ஷெ இராமாநுஜார்ய திவ்யசரிதையில் (பக். 236—7)—

"அம்பொற் குடைச்சக ணூயிரத்.........
தோன்பதாம் வர்ஷத்...........—தென்பால்
சேன்னி குலோத்துங்கன் சித்ரகூடச் செங்கண்மால்
தன்னை யலையெறிநாள் தான்"

என்று காணப்படுகின்றது. இப்பாட்டுள், சகாப்தம் குறிக்குமிடத்தும் பிறவிடங்களினும் எழுத்துக்கள் சில இடையிடையே சிதைந்துள்ளமை தெரியலாம்.‡ அச்சுப்பிரதியில் உள்ளபடியே—

'அம்பொற் குடைச்சக ணூயிரத் தொன்பதாம் வர்ஷத்து'

---

* இக்கிரந்தம், பிள்ளைலோகம்ஜீயர் என்ற பெரியாரால் மணிப்பிரவாள நடையில் உத்தேசம் 16-ம் நூற்றூண்டில் இயற்றப்பட்டதாகும்.

† பெரியபுராணம், பாயிரம் 8; கோயிற்புராணம், பாயிரம் 12; சிதம்பர புராணம், பாயிரம், 11.

‡ சென்னை மியூஸியம் இராஜாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையில் உள்ள இராமாநுஜார்யதிவ்யசரிதைச் சுவடிகள் பலவற்றை ஒப்புநோக்கியவிடத்தும், அச்சுப்பிரதியில் உள்ளபடியே இது சிதைந்து காணப்பட்டது.

http://acharya.org

என்று கொள்வோம் எனின், அது வெண்பாவுக்கு அமையாமையாற் பொருந்தாதாம். பொருந்துமாறு திருத்தினும் 'ஆயிரத்தொன்பதாம் வர்ஷத்' தென்பதனுற் குறித்த கிறிஸ்தவாப்தம் (1009×78=) 1087 ஆகும். இது, முதற்குலோத்துங்கனது ஆட்சிக்காலமேயன்றி, அவன் பேரனுன இரண்டாம் குலோத்துங்கற்கு உரியதன்று. அதனுல், ஆயிரத் தென்பதையடுத்துச் சில வெழுத்துக்கள் விடுபட்டுப்போயின என்பதும், ஒன்பதாம், தேன்பால் என்பன, முறையே இரண்டாமடியின் முதற்சீராகவும் தனிச்சீராகவும் அமைந்த எதுகைமொழிகள் என்பதும் அறிஞர்க்கு எளிதில் விளங்கக்கூடியன. இவ்வாறு இடையில் விடுபட்ட எழுத்துக்கள் இன்னவென்பதைத் தெரிந்துகொள்வதற்கு மேற்குறித்த திவ்யசரிதையிற் கண்ட மற்ருெரு வெண்பாச் சிறந்த கருவியாக உள்ளது. அஃதாவது—

"நற்றிருவா ழுந்தில்லை நாரா யணப்பெருமாள்
சித்ரமணிப் பொற்கூடஞ் சேருநாள்—சத்தியமே
நானூற்றின் மேல்வருட நான்மூன்றுஞ் சென்றதற்பின்
வானோர் தொழவாழ்வர் வந்து"

என்பதாம். "தில்லை நாராயணமூர்த்தி, இற்றைக்கு 412 வருஷங்கட்குப் பின்பு திருச்சித்திரகூடத்திலே புனப்பிரதிஷ்டை பெற்றுத் தேவர்கள்போற்ற வாழ்வர், இது சத்தியம்" என்பது இதன் பொழிப்பு இவ்வெண்பா, திருச்சித்திரகூடம் அழிவுற்றகாலத்துப் பின்னிகழ்ச்சியறிந்து இராமாநுஜமுனிவரே பாடியதாக அவரது திவ்யசரிதை கூறுகின்றது. ஆயினும், அக் கோயிற்றிருமால் தம் காலத்தில் திரும்பப் பிரதிஷ்டை பெற்றதை நேரிலறிந்தாரொருவர், முன்பு சித்திரகூடம் சோழனுற் சிதைவுண்ட காலத்திலிருந்து கணக்கிட்டு, 412 ஆண்டுகட்குப் பின்பு அப் புனப்பிரதிஷ்டை நடந்த செய்தியை இராமாநுஜர் வாய்மொழியாகக் கொண்டுகூறியதென்று நாம் கொள்ளத்தகும். இங்ஙனம், 12-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் அழிவுற்றதாகக் கூத்தர் முதலியோராற் குறிப்பிடப்பெற்ற திருச்சித்திரகூடம், அதற்கு 4 நூற்ருண்டுகட்குப்பின்பு திரும்பப் பிரதிஷ்டைபெற்றது என்ற இவ் வரியவிஷயம் சாஸனங்களாலும் நூல்களாலும் பெரிதும் ஆதரிக்கப்படுவதாகும்.

சிதம்பரம், ஸ்ரீ நடராஜர்கோயில் முதற்பிராகாரத்துத் தெற்குத் திருமதிலில் வரையப்பட்டுள்ள சாஸனமொன்றில்—விஜயநகர வேந்தரான அச்சுததேவ மகாராயர், சகாப்தம் 1461ஆ மிதுனமீ சனிவாரம் அநுராதா நக்ஷத்திரத்தில் (கி. பி. 1539 மேமீ 31உ) பெரும்பற்றப் புலியூர்த் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாளுக்குப் புதியவாகக் கோயில் முதலியன சமைத்து, அப் பெருமாளைப் புனப்பிரதிஷ்டை செய்வித்தும், அத்திருமாலின் நித்யநைமித்திக வழிபாட்டுக்கு 500 பொன்வருவாயுள்ள

http://acharya.org

கிராமங்களை அளித்தும் சிறப்பித்தார் என்ற அரிய செய்தி காணப்படுகின்றது.* அக் கோயிலுள் வேறிடத்தமைந்த சாஸனமொன்றும் இப்பிரதிஷ்டைபற்றிக் குறிப்பிடுவதாம்.† இங்ஙனம் சிறப்பித்த அச்சுத தேவராயர், பிரபலரான கிருஷ்ணதேவராயரின் இளவலாய் அவர்க்குப் பின், கி. பி. 1532—42 வரை ஆட்சிபுரிந்தவர் என்பது சரித்திரப் பிரசித்தம். இதனால், தில்லைத் திருமால் திரும்பச் சித்திரகூடத்தில் ஏறியருளியகாலம், கி. பி. 1539 என்ற உண்மை மிகத்தெளிவாகின்றது. ஆகவே, இக்காலத்துக்கு 412 ஆண்டுகட்கு முன்புதான்—அஃதாவது கி. பி. 1127-ம் ஞூ—அச் சித்திரகூடம் அழிவுற்றது என்பது பெறப்படுவதாம்.

இங்ஙனமாயின், இந்த 1127-ம் ஆண்டு, இரண்டாங் குலோத்துங்கன் தந்தை விக்கிரமசோழனது ஆட்சிக்காலம் ஆகின்றது. இக்காலத்தில், சித்திரகூடவழிவுக்குக் காரணமாயிருந்தவன் அவன் மகனே என்பது எவ்வாறு பொருந்துமெனிற் கூறுவேன். விக்கிரமசோழன் (கி. பி. 1117—35), தன்னாட்சியின் பத்தாமாண்டில் தில்லைச் சிவாலயத்துக்குப் பற்பல திருப்பணிகளும் புரிந்து அத் தலத்தையே பெரிதும் சிறப்பித்தவன் என்பது அவன் மெய்க்கீர்த்தியால் ‡ தெளிவாகின்றது. இங்ஙனம் புரிந்த திருப்பணிகள்யாவும் பூர்த்திபெற்றது கி. பி. 1128-ம் ஆண்டென்று, அம்மெய்க்கீர்த்தியுட் கண்ட காலக்குறிப்பாற் பெறப்படுவதாம்.§ இங்ஙனமாகவும், அத் திருப்பணிகளிற் பலவற்றை அவ் விக்கிரமனுக்கு உரியவையாக்காமல் அவன்மகன் குலோத்துங்கன் செயல்களாகவே, குலோத்துங்கனுலாவினும் தக்கயாகப்பரணியிலும் கூத்தர் பாடுகின்றார். ஆனால், இவர் பாடியவாறு, அக்குலோத்துங்கனது மெய்க்கீர்த்திகளோ, தில்லைத் திருப்பணிகள் புரிந்தவன் அவனே என்று குறிப்பிட்டனவல்ல. தில்லையில் அவன்புரிந்த பணியாகச் சாஸனங்கள் குறிப்பிடுவது, பேரம்பலத்தை அவன் பொன்

---

* MER. *272* of 1913.

† Ibid. 1 of 1915.

‡ "திறைநிறைத்துச் சொரிந்த செம்பொன் குவையால், தன்குல நாயகன் தாண்டவம் பயிலும், செம்பொனம் பலஞ்சூழ் திருமா ளிகையும், கோபுர வாசல் கூடசாலைகளும், பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும், விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து, அம்பல நிறைந்த வற்புதக் கூத்தர்க்குத், திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து, பத்தா மாண்டிற் சித்திரைத் திங்கள், அத்தம் பெற்ற வாதிவா ரத்துத், திருவளர் மதியின் திரயோதசிப் பக்கத்து, இன்னபலவு மினிது சமைத்தருளி......" எனக் காண்க.

§ The Colas, Vol. ii, part i, p. 66 *n*.

http://acharya.org

வேய்ந்ததொன்றேயாம்.* இக் காரணங்களினின்று, தந்தையால் இயற்றுவிக்கப்பட்ட தில்லைத் திருப்பணிகளை நேரிற் கண்காணித்து நிறைவேற்றி வைத்தவன் அவன் மகனான குலோத்துங்கனே என்றும், அதனாற்றான், அத் திருப்பணிகளைக் கூத்தர் இவனுக்கேற்றிச் சிறப்பிக்கலாயினார் என்றும் நாம் கொள்ளல் பொருத்தமாகும்.† இக் குலோத்துங்கன் தன் தந்தையின் ஆட்சியிடையில் இளவரசனாய் முடிசூடி அரசியல் நிர்வாகத்தை ஏற்று நடத்திவந்தவன் என்று சரித்திரவறிஞர் கருதுவர்.‡ இதனாலும், தந்தைபுரிந்த திருப்பணிகளை அவன் மகன் மேற்பார்த்து நிறைவேற்றியவனென்பது ஏற்புடையதாதல் காணலாம். ஆகவே, விஜயநகர வேந்தரால் புனப்பிரதிஷ்டைபெற்ற **1539**-ம் ஆண்டுக்கு 412 வருஷங்கட்குமுன் சித்திரகூடவழிவு நேர்ந்தது என்று இராமாநுஜ திவ்யசரிதை குறிப்பிட்டிருப்பது, கி. பி. **1127**-ல் விக்கிரம சோழனாட்சிக்காலத்து, அவன்மகன் மேற்பார்வையில் முடிந்ததாகத் தெரியும் தில்லைத் திருப்பணிச்செயல்களுள் ஒன்றாகவே கொள்ளற்குரியது.

இதுவரை கூறியவற்றால், **1127**-ம் ஆண்டே திருச்சித்திரகூடம் அழிவுண்ட காலமென்பது தெளிவாயினமையின், அவ்வழிவுபற்றி இராமாநுஜ திவ்யசரிதையிற் கண்ட வெண்பாவில்—

'ஆயிரத்[து மேல்நாற்பத்] தொன்பதாம்'

என்று ஆதியில் அமைந்திருந்ததொடரே இடையிற் சில எழுத்துக்கள் சிதைந்ததாகவேண்டும் என்க. இத்தொடருள் '**ஆயிரத்**'தையடுத்து—

'மேல்முப்பத் தொன்பதாம்' (கி. பி. 1117)
'மேல்ஐம்பத் தொன்பதாம்' (கி. பி. 1137)

என்ற சொற்களைக் கூட்டினும் வெண்பாத்தளைக்கு அமையுமேனும், அவற்றுள் முன்னது(1117) முதற்குலோத்துங்கனது ஆட்சிக் காலமாகவும், பின்னது(1137) இராமாநுஜமுனிவரது அந்திமதசையாகவும்§ உள்ளமையால் பொருந்தா என்பது தெளிவு. சோழனால் திருச்சித்திரகூடம் அழிவுற்றதையும், அவனாற் கடலில் வீழ்த்தப்பட்ட திருமால் மூர்த்தத்தை ஸ்ரீவைஷ்ணவர்சிலர் தேடிக்கண்டு கீழைத் திருப்பதிக்கு எடுத்துச் சென்றிருப்பதையும் கேள்வியுற்ற அம் முனிவர், அத்திருப்

---

* MER. 350 of 1927.

† இவ்வாறே, இலிங்கரெட்டியார் என்பவர் திருவெங்கைத் திருப்பணிகள் பலவும் புரிந்தவர் என்று சாஸனங்கள் கூறினும், அவர்புத்திரர் அண்ணாமலை ரெட்டியாரே அவற்றைச் செய்தவராகச் சிவப்பிரகாசமுனிவர் பாடுதல் ஒப்பிடத்தக்கது (சாஸனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம். 183—4).

‡ I. M. P. Vol. i, p. 132.

§ '**தர்மோநஷ்ட:**' என்பது இவ் அந்திமகாலத்தைக் குறிக்கும் வாக்யம்: அஃதாவது சகாப்தம் 1059 (கி. பி. 1137).

http://acharya.org

பதிக்கு விரைந்து சென்று, அத்தலத்தே தில்லைக் கோவிந்தராஜரைப் பிரதிஷ்டித்துவிட்டு ஸ்ரீரங்கம் வந்து அங்கரிற் சிலவாண்டுகள் வாழ்ந்து பின் பரமபதம் அடைந்தார் என்பதே பழைய குருபரம்பரை வரலாறு*. அதனால், அம் முனிவருடைய அந்திமதசையான 1137-ம் ஆண்டைச் சித்திரகூடவழிவின் காலமாகக் கொள்ளுதல் பொருந்தாதென்க. எனவே, அவ்வழிவுக் காலத்தைக் குறிப்பிட்ட இராமாநுஜார்ய திவ்ய சரிதை வெண்பா—

“அம்பொற் குடைச்சக ளுயிரத்[து மேல்நாற்பத்]
தொன்பதாம் வர்ஷத் [துயர்தில்லைத்]—தென்பா[லி]ல்
சென்னி குலோத்துங்கன் சித்திரகூ ட[த்திரு]மால்
தன்னை யலையெறிநாள் தான்”

என்றவாறு ஆதியிலமைந்திருந்து பின் சிதைந்ததாக வேண்டுமே என்பது எளிதில் விளங்குவதாம்.

இனி, 1539-ல் நடந்த சித்திரகூடப் புனப்பிரதிஷ்டை, சோளசிம்மபுரம் தொட்டாசாரியர் என்ற மஹாசாரியரது தூண்டுதலின்மேல் கிருஷ்ண தேவரின் இளவலான அரசரால்† நிறைவேறியது என்பது, பிரபந்நாமிருதம் என்ற வடமொழிக் குருபரம்பரையால் தெரியவருகின்றது‡. இப் பிரதிஷ்டைக்குமுன் 4-நூற்றாண்டுகளாகத் தில்லையில் திருமால்கோயிலே இல்லாமலிருந்ததென்ற உண்மையைத் தமிழ் நூலொன்றும் தக்கவாறு வலியுறுத்துதல் அறியத்தக்கது.

‘வாசுதேவசரிதை’ என்ற பெயரிட்டு, நெல்லிநகர் அருளாளதாசர் என்ற வரதராஜர் பாடிய பாகவதபுராணத்தில் தில்லைக் கோவிந்தராஜர் துதியாக—

* பாட்டனும் பேரனுமான குலோத்துங்கர்களை ஒருவராகக் கருதிப் பிற்பட்ட குருபரம்பரைகள் சில கூறுவது, ஈண்டு ஆராய்ச்சிக்குரியதன்று.

† இவ் விளவலான அரசர், சந்திரகிரியிலிருந்தாண்ட இராமராயர் என்று அவ் வடநூலிற் காணப்படுகின்றது. இவ் விராமராயர் அச்சுததேவரின் பிரதிநிதியாய்த் தென்னாட்டைச் செல்வாக்குடன் ஆண்டவரேயன்றிக் கிருஷ்ண தேவர்க்கு இவர் இளவல் அல்லர். அதனால், பிரதிநிதியான தலைவரைப் பேரரசராகப் பிரபந்நாமிருதம் கூறியதுமட்டும் வேறுபாடாகவே கொள்ளப்படும்.

‡ 13-ம் நூற்றாண்டில், செஞ்சித் தலைவரான கோபணராயரால் சித்திரகூடப் பிரதிஷ்டை நடைபெற்றதென்று பிற்பட்ட குருபரம்பரை சில கூறும். ஆயின், இதற்குப் பழைய பிரமாணம் இல்லை. அக் கோபணர், துருக்கரால் ஸ்ரீரங்கத்துக்கு விளைந்த கேடுகளை ஒழித்து, ஸ்ரீ ரங்கநாதரைக் கோயிலில் எழுந்தருளப் பண்ணியவர் என்பதே கோயிலொழுகு முதலியவற்றிற்கண்ட வரலாறு.

http://acharya.org

" கச்சணி நகில்வீ றியவுமை கொழுநன்
நடஞ்செயக் கமலனே டிமையோர்
நிச்சலு முராரி தனைத்தொழும் பதியை
முன்புபோல் நிறுவிய நிருபன்
அச்சுத ராயன் வணங்கிட அரவில்
அழகிய தில்லையம் பதிக்கே
மைச்சுடர் வரைபோல் வயங்கு கோவிந்த
ராயன்மா மலரடி வாழி " (திருவரங். 69)

என்றுள்ள செய்யுள் நோக்கத்தக்கது. ஈண்டு, 'இமையோர் முராரி தனைத் தொழும்பதி' என்றது, தில்லைத் திருச்சித்திரகூடமாகும். 'புத்தி தத்துவத்தின் நிருத்தச்செயலை ஸாக்ஷிபூதனாகவிருந்து காண்கின்ற பரமாத்மாவை இருதயபுண்டரீக மத்தியில் நிறுவி மிக்கபிரேமையுடன் தியானிக்கக்கடவன்" (மைத்திரேயீயுப.) என்ற வேதப்பொருள் வெளியாம்படி, தில்லையில் அரியரர்கள் கோயில்கொண்டுளார் என்பது ஒருசார் கொள்கையாதலின் 'உமைகொழுநன் நடஞ்செய...இமையோர் முராரிதனைத் தொழும் பதி' என்றார். அப்பதியை 'முன்புபோல் நிறுவிய நிருபன் அச்சுதராயன்' என்றதனால், சோழர்காலத்து அழிபட்டது முதல், தில்லையில் இல்லாதிருந்த திருமால்கோயிலைத் திரும்பப் பிரதிஷ்டைசெய்து அங்கரங்கவைபவங்களெல்லாம் அமைத்தவர் அச்சுததேவமகாராயரே என்பது தெளிவாம். அவ்விராயர் 'வணங்கிட வயங்கு கோவிந்தராயன்' எனவே, பாகவத ஆசிரியரான இவ் வரதராசர் காலத்தில், விஜயநகரவேந்தரால் கடவுண்மங்கலம்பெற்றவர் சித்திரகூடத் திருமால் என்பது பெறப்படும். இவ் வாசிரியர் திருச்சித்திரகூடப் பிரதிஷ்டையை நேரிற் கண்டு இத் துதிச்செய்யுள் பாடியவரென்றே சொல்லத்தகும். இவரியற்றிய வாசுதேவசரிதை அரங்கேறப்பெற்ற காலத்தை—

" ஆயுமறை யோரெண்ண வருஞ் சகாத்தம்
ஆயிரத்து நானூற்றே டறுபத் தஞ்சாம்
தூயசுப கிருதுதனில் முதன்மா தத்திற்
றுலங்குகுரு வாரத்துத் திராட நாளில்
நேயமுட னெல்லிநகர் வரத ராசன்
நிகரிலரங் கத்திலர வணையி னேங்கும்
நாயகன்மு னறிஞர்மகிழ்ந் திடவே வாசு
தேவகதை யரங்கேற்றி நலனுற் றனே "

என்று இவரது நூற்பாயிரங் குறிப்பிடுகின்றது. இதனால், சகாப்தம் 1465 (கி. பி. 1543)-ல் வரதராசர் தம் நூலை அரங்கேற்றியவர் என்பது தெரியலாம். எனவே, திருச்சித்திரகூடப் புனப்பிரதிஷ்டையைக் குறிப்பிட்டுப் போந்த இவர், அப் பிரதிஷ்டைக்கு நான்கு வருஷங்கட்குப் பின்புதான் தம் பெருநூலைப் பிரசித்தப்படுத்தியவர் என்பது தெளியப்படுதலால், அச்சுததேவராயரின் பிரதிஷ்டையை நேரில்

http://acharya.org

அறிந்தவராகவே இவ் வரதாாசரைக் கொள்ளத் தடையில்லை. இவ்வாசிரியரது ஊரான நெல்லிநகர், தில்லையம் பதிக்கு அணிமையிலுள்ள நெல்லிக்குப்பம் என்ற ஊர்போலும். இவ்வாறு 16-ம் நூற்றாண்டில் நடைபெற்ற சித்திரகூடப் பிரதிஷ்டைக்கு ஒரு நூற்றாண்டுக்குப்பின்பு, ஸ்ரீரங்கதேவராயர் என்ற விஜயநகரவேந்தர், சகாப்தம் 1565 (கி. பி. 1643)-ல், திருச்சித்திரகூடத்து மகாமண்டபத்தையும், பிராட்டிமார்களின் கோபுர விமானங்களையும் புதுப்பித்ததோடு, அக் கோயிலைச்சார்ந்த ஸ்ரீவைஷ்ணவர்கட்காக 5-கிராமங்களை இறையிலியாக்கியும் உதவினர் என்று ஸ்ரீ நடராஜர்கோயிலில் உள்ள மற்றொருசாஸனம் கூறும்.*

இனி, 'வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே' என்ற திருக்கோவைத் தொடரால், அது பாடிய வாதவூரடிகள் காலத்துத் திருமால்கோயில் அம்பலமுன்றிலில் அமைந்திருந்தசெய்தி முன்பு குறிக்கப்பட்டது. இத்தொடர்க்குப் பேராசிரியர்,

"இன்னும் வரங்கிடக்கின்றனுகலின் முன்கண்டது ஒன்றுபோலும் என்பது கருத்து"

என்று எழுதிச் செல்வர். இதனால், திருச்சித்திரகூடம் அழிவுற்ற கி பி. 1127-க்கு முன்பு அப்பேராசிரியர் வாழ்ந்தவர் என்பது பெறப்படும். இதற்கேற்ப, இரண்டாங் குலோத்துங்கன் முன்னிலையிற் கூத்தர் அவன்மேல் உலாப்பாடியபோது—'பேராசிரியர், நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது' என்ற தலைக்குறிப்புடன் செய்யுளொன்று (129) தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது. இதனால், கூத்தர் காலத்தே பேராசிரியர் என்று சிறப்பிக்கப்பட்ட பெரும் புலவரொருவர் விளங்கியமை தெரியலாம். இவர், தொல்காப்பியந் திருக்கோவைகட்கு உரையிட்ட பேராசிரியரோ என்று கருத இடமுண்டு. தம் காலத்தே பெரும்புலவர்சிலர் பாடிவரும் உலா முதலிய பிரபந்தங்களையும் இப்பேராசிரியர் தழுவிக் கௌரவித்தெழுதி யிருப்பது, கூத்தர் முதலியோரை நினைத்துப்போலும் என்று அறிஞர்க்குத் தோன்றக்கூடியது.

இங்ஙனமாக, முதலிற் குறித்தபடி உத்தேசம் 8-ம் நூற்றாண்டிற் பல்லவவேந்தனுற் பிரதிஷ்டையினையும், 12-ம் நூற்றாண்டில் சோழனுற் குலைவையும், 16-ம் நூற்றாண்டில் விஜயநகரவேந்தரால் புனப் பிரதிஷ்டையையும் பெற்ற இத் திருச்சித்திரகூடம், 20-ம் நூற்றாண்டில் (1934), உள்விவகாரங்களை நீக்கியும் கற்றிருப்பணியாற் சிறப்பித்தும் ராஜா ஸர் அண்ணமலைச் செட்டியாரவர்களாற் பெற்ற சம்புரோக்ஷணையையும் சேர்த்து நோக்குமிடத்து, நான்குநூற்றாண்டுக்கு ஒருமுறை அமைந்த இச் சித்திரகூடத்தின் சரித்திரம் ஒரு விசித்திரமுடையதென்றே தோன்றக்கூடியது.

மு. இராகவையங்கார்.

---

* MER. 271 of 1913.

http://acharya.org